மடைகிறார்கள் என்பதை அறிந்து அந்த நடைமுறைகளை மற்ற சிறப்பங்காடிகளிலும் பின்பற்றச் செய்வதற்கு, அவர்களுக்கு இந்த அங்காடியில் பயிற்சியளிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சென்ற திங்களில் இதற்காகவே எல்லா சிறப்பங்காடிகளிலும் பணியாற்றுகின்ற அதிகாரிகளையும் அழைத்து, தனிப்பட்ட வியாபாரிகளையும் அழைத்துப் பேசியிருக்கிறோம். பொதுவாக கொள்முதல் செய்வதில் கோவை சிறப்பங்காடி சிறப்பாகச் செயல்பட்டதினால் நல்ல முறையில் இயங்கி, லாபமடைய முடிந்ததாகத் தெரிகிறது. கொள்முதல் செய்வதற்கு ஒரு குழு அமைப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. விரைவில் அது முடிவுபெறும் என்று கருதுகிறேன். கோவை கூட்டுறவு சிறப்பங்காடியைப் பின்பற்றி, இப்போது திருச்சி சிறப்பங்காடி நடைபெற்று லாபகரமாகச் செயல்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

Gudiyatham Town Co-operative Society

* 239 *Q*.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether a petition, dated 17th January 197 and signed by the members of the Gudiyatham Town Co-operative Society, Gudiyatham regarding the unreasonable closure of the society has been received by him; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1961, பிரிவு 65-ன் கீழ் பண்டகசாலையின் நடவடிக்கைகளிற்கான ஓர் விசாரணை நடந்து வருகிறது.

திரு. எ. க. துரைசாமி: தலைவரவர்களே, இயக்குநர்களில் சிலர் அந்தச் சங்கத்தில் 2,400 ரூபாய் கையாடல் செய்ததை ஒப்புக்கொண்டு, அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டிவிடுவதாகச் சொல்லி அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்களா? அப்படியானால் அவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற அரசு முன்வந்திருக்கிறதா? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதே பண்டகசாலையில் முதலில் கையாடல் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுவது 2,405 ரூபாய். மீண்டும் பரிசீலனை செய்ததில் 74,211 ரூபாய் என்ற அளவுக்கு மேலும் மோசடி செய்யப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 2,400 ரூபாயைக் கட்டிவிட்டால் மோசடி செய்தவர்களை விட்டுவிட முடியாது.

New buses on express bus routes

* 354 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state the number of express buses that have been replaced by new ones during the years 1971–72 and 1972–73?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பழைய விரைவுப் பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்ட புதிய விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கை 1971-72-ம் ஆண்டில் 81-ம், 1972-73-ம் ஆண்டில் 54-ம் ஆகும்.

திரு. என். கே. பழனிசாமி : வாங்கக்கூடிய புதிய பஸ்கள் எல்லாம் அதிக தூரம் செல்லக்கூடிய ரூட்டுகளில் விடப்படுகின்றன. அதனால் பெரிய அளவில் நகரங்களில் ஓடக்கூடிய பஸ்கள் அடிக்கடி அங்கங்கே நின்றுவிடுகின்றன பழுதுபட்டு. எக்ஸ்பிரஸ் பஸ்களும் நின்று விடுகின்றன. அப்படி இருக்கும்போது போன வருஷத்தை விட இந்த வருஷம் புதிய பஸ்கள் வாங்கும் எண்ணிக்கையை குறைத்துவிட்டதற்கு என்ன காரணம் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நெடுந்தூரம் செல்லுகின்ற விரைவுப் பேருந்து வழித் தடங்களில் புதிய பேருந்துகளை விடவேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. காரணம் பழைய பேருந்துகளை விட்டால் ஒருவேளை பழுது ஏற்பட்டு விடலாம் என்ற எண்ணம். ஆகவே, அரசின் முடிவுப்படி இரண்டு ஆண்டுகள் புதிய பஸ்கள் நெடுந்தூர விரைவு பேருந்துகளாக விடப்பட்டு, அதற்குப் பின்னால் அவை மாவட்ட அளவிலும், மற்ற குறைந்த தூர வழித் தடங்களிலும் விடப்படுகின்றன.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, பொதுவாக நம்முடைய போக்குவரத்துத் துறையில் இப்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில குறைபாடுகள்